# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 7 (20-04-1998) திங்கட்கிழமை UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்:122


21 APR 1998

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா பங்களிப்பு தரவேண்டும்

## கூட்டணி செயலாளர் நாயகம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 20

''இலங்கையில் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும்.''

கொழும்பு வந்திருந்த ஐ. நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் பில் றிச்சேர்ட்சன், அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான உதவி வெளிநாட்டு அமைச்சர் கார்ள் இன்ரபேர்க் ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அமெரிக்கத் தூதரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த விருந்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இரா. சம்பந்தன் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பில் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் உட்பட ஐ. தே. க. பிரதிநிதிகளும், அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

இரா. சம்பந்தர் மேலும் தெரிவித்ததாவது:

வடஅயர்லாந்து பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது. சில நூறு பேரை இழந்த அந்த

(10ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்காவின் பங்களிப்புத் தானே ஏற்கனவே தெரிஞ்ச விசயமாச்சு...!

# திருமலை கடல் பரப்பில் 7மணி நேரம் கடும் சமர்!

## புலிகள் தரப்பில் ஐவர் மரணமென அறிவிப்பு

வவுனியா, ஏப்ரல் 20

திருகோணமலை துறைமுகத்தில் இருந்து கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு முதல் அதிகாலை வரை கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளின் கடற்புலி அணியினருக்கும் இடையில் 7 மணி நேரத்துக்கு மேலாகக் கடும் சமர் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 7-50 க்கு ஆரம்பமான இந்த கடற்சண்டை நேற்று அதிகாலை 3-00 மணிவரைநீடித்தது.

ஸ்ரீலங்கா கடற்படைத் தரப்பில் 10 டோறா பீரங்கிப்படகுகள் இச்சண்டையில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த உக்கிரமான சண்டையில் இரு கடற்கரும்புலிகள் களப்பலியானார்கள் என்றும்–

கடற்கரும்புலி கப்டன் பூங்குழலி, கடற் கரும்புலி கப்டன் ஈழவன் ஆகியோரே களப்பலியான கடற்கரும்புலிகள் என்றும் புலிகளின் குரல் தெரிவித்தது.

அதே சமயம் இலங்கையின் கிழக்குப் பிராந்தியக் கடற்பரப்பில் நடைபெற்ற கடும் சண்டையின் போது கடற்படைப் பீரங்கிப்படகுகள் விடுதலைப் புலிகளின் ஐந்து படகுளை மூழ்கடித்துள்ளன

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி படையினர் தாக்குதல்!

மட்டக்களப்பு, ஏப். 20

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் நேற்று மாலை விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு விடுதலைப்புலிகள் உயிரிழந்துள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பதுங்கியிருந்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## இருவர் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, ஏப், 20

அம்பாறை லகுகலையில் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் கப்டன் சிவநாதன் (வேலாயுதம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காவல்நிலையம் மீது மட்டக்களப்பில் தாக்கு

### 5 பொலீஸார் காயம்

மட்டக்களப்பு, ஏப். 20

மட்டக்களப்பு, மஞ்சத்தொடுவாய் பொலீஸ் காவல் நிலையம் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

வாவியூடாகத் தோணிகளில் வந்து இத் தாக்குதலில் அவர்கள் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் 5 பொலீஸார் காயமடைந்தனர் என்றும் —

விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் – பொலீஸார் கூறுகின்றனர். (இ-21)

## காத்தான்குடியில் தாக்கு

வவுனியா, ஏப். 20

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி இராணுவ முகாம் காவலரண் மீதும் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த வீடு ஒன்றின் மீதும் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்று '' புலிகளின் குரல் '' தெரிவித்தது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும்—

தமது தரப்பில் மேஜர் அருந்தவராஜ் (அமரசிங்கம் லேகரன்—மட்டக்களப்பு) என்பவர் களப்பலியானதாகவும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது ரி 56—1 ரகத் துப்பாக்கி —1, நடுத்தர ரவைகள்—300, ஏ. கே. ஹோல்சர்—2, ஏ. கே. ரவைக் கூடுகள்—7, ரம் ரவைக் கூடுகள்—82, தண்ணிர் கான்—2 ஆகியவற்றைக் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

## பாரிய ஜெனரேட்டர் காங்கேசன் வந்தது

யாழ்ப்பாணம், ஏப். 20

குடாநாட்டில் மின்சாரம் வழங்க பாரிய ஜெனரேட்டர் ஒன்று காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

மின்சாரசபையும், 'இன்ரகூலர்' நிறுவனமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் காங்கேசன்துறையில் அமையவிருக்கும் மின் நிலையத்துக்கான முதலாவது ஜெனரேட்டரே எடுத்து வரப்பட்டுள்ளது.

''லங்கா முடித'' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட இந்த ஜெனரேட்டரை காங்கேசன்துறையில் பொருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும்—

விரைவில் இதன் மூலம் மின்சாரம் வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த மின் நிலையத்துக்கான ஏனைய ஜெனரேட்டர்கள் விரைவில் காங்கேசன் துறைக்கு எடுத்து வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# சிறிமாவோ பதவி துறந்தாலும் அனுருத்த பிரதமராகமாட்டார்!

## லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கே ஆதரவு!!

கொழும்பு, ஏப். 19

தாம் பிரதமர் பதவியில் இருந்து விலக எந்நேரமும் தயார் என்றும்—

ஆனால் தமது பிரதமர் பதவி கலாசார, மதவிவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கு வழங்கப்பட்டால் மாத்திரமே நாம் பதவி விலகத் தயாராக இருப்பதாகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது நெருங்கிய சகாக்களிடம் தெரிவித்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கு பிரதமர் பதவி கிடைப்பதில் தடங்கல் ஏற்படுமானால் தமது பதவிக் காலம் முடிவடையும் 2 ஆயிரமாம் ஆண்டு வரை தாம் பதவியில் இருக்க முடிவு செய்திருப்பதாகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆவார்.

சிறிமாவோவுக்கு பின்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மீண்டும் புலிகளின் ஒளிபரப்பு

### படையினர் முறியடித்தனராம்

கொழும்பு, ஏப். 20

குடாநாட்டில் புலிகளின் தொலைக்காட்சி ஒளிபரப்பு முயற்சியைப் படையினர் முறியடித்து விட்டனர் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இது பற்றி தெரிய வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் தெளிவற்ற நிலையில் பிரபல்யமான தமிழ்ப்படம் ஒன்று தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்டதைப் படையினர் அவதானித்தனர் என்றும் —

உடனடியாக இது குறித்து ஆராயப்பட்டு பூநகரிப் பகுதியில் இனம் தெரியாத ஓர் இடத்தில் இருந்து இது ஒளிபரப்பப்படுவது தெரியவந்ததாகவும்—அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிக்கன கடன் வழங்கும் கூ. சங்க பணிகளை விஸ்தரிக்கத் தீர்மானம்

வரணி, ஏப். 20

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் படவுள்ளன.

அண்மையில் நடைபெற்ற சமாசத்தின் பணிப்பாளர்கள், பிராந்திய சபைத்தலைவர்கள், கூட்டுறவுத்திணைக்கள உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள சமாசப் பணிமனையில் நடைபெற்றது.

முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் இயங்காதுள்ள சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீள இயங்க வைப்பது எனவும், யாழ். மாவட்டத்தில் புதிய சங்கங்களை அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-171)


## குருக்கள் தேவை

வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோயிலுக்கு குருக்கள் அல்லது பூசகர் தேவை.

30-04-98 இற்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

Dr. A. K. காசிப்பிள்ளை
இராஜ வைத்தியர்
அ. க. குமாரசாமி வைத்தியசாலை,
சிவன் கோயிலடி,
வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

(55058)



## SUNIL ARTS

01 – 04 – 1998 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

SUNIL ARTS,
Photo Print Quick Service,
272, Stanley Road,
Jaffna.

(சி/3497)


## மரண அறிவித்தல்கள்

### நடேசக்குருக்கள் சவுந்தரம்மா

அராலி வடக்கு—ஞானியாமடம் சிவன்கோயில் நடேசக்குருக்கள் சவுந்தரம்மா 19-4-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடேசக்குருக்களின் மனைவியும், சுப்பிரமணியக் குருக்கள் (வேலக்கைப் பிள்ளையார் கோயில்), இராமச்சந்திரசர்மா (வர்த்தகர், கந்தர்மடம்) ஆகியோரின் தாயாரும், நாகேஸ்வரி பாலசுப்பிரமணியக் குருக்கள், கௌரி பரமேஸ்வரக் குருக்கள், இராஜேஸ்வரி சண்முகநாதக் குருக்கள், யோகேஸ்வரி சிற்சபேசக் குருக்கள், கேதீஸ்வரன், சியாமளாதேவி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-4-98) திங்கட்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந. இராமச்சந்திர சர்மா
(மகன்)
23, விதானையார் வீதி,
கொழும்புத்துறை.

(55062)

### வல்லிபுரம் ஜெயராசன் (அப்பன்)

காளி கோயிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது K. K. S. றோட் நாச்சிமார்கோயிலடியில் வசித்தவரும் கொக்குவில் அப்பன் ரேணிங் வேக்ஸ் உரிமையாளருமாகிய வல்லிபுரம் ஜெயராசன் (அப்பன்) 19 – 4 – 98 ஞாயிறு காலமாகிவிட்டார்.

அவர், அமரர் வல்லிபுரம் சரஸ்வதியின் மகனும், இந்துமதியின் அன்புக் கணவரும், ஓட்டுமடம் காளிராசா பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலகம்சன், நிரோஜன், றொன்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, விமலாதேவி, மல்லிகாதேவி, சவுந்தரராசன், மகேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், பாலகேசரி, சந்திரசேகரம், முகுந்தினி (கனடா), நகுலினி, இந்திரன் (டென்மார்க்), வசந்தி (டென்மார்க்), மோகனதாஸ் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், சங்கத்தானை சிவராசா (சின்னராசா) ஆகியோரின் சகலனும், அமரர்கள் கதிரமலை (மலை), கிட்டினர், விக்கினேஸ்வரன் (பிள்ளையார்) மற்றும் நடராஜா (ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் மருமகனும், சிவாஜினி, சுதாஜினி, சுரேஷ், ராஜீவன் (அப்பன் ரேணிங் வேக்ஸ்), திலீபன், அகிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-4-98) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாச்சிமார்கோயிலடி இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெ. இந்துமதி
(மனைவி)
கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

(55060)

## கொடுப்பனவு

செம்பியன்பற்று, ஏப். 20

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. (ஐ-36)


## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில்
19 - 04 -98 ஞாயிறு முதல்
விஜய், சாளினி நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சிகள்: 10–30, 2–30
(பழைய நேரம்)

(55040)



## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

திங்கள், செவ்வாய்
சரவணன், சுபலட்சுமி
பிரகாஷ்ராஜ்
நடித்த
'சந்தோஷம்'
புத்தம் புதிய வெளியீடு!
குடும்பச்சித்திரம்

நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223

(55008)



## நெல்லியடி மகாத்மா

வெண்திரையில்
20-04-98 முதல்
சரவணன் - சுபலட்சுமி
நடித்த
'சந்தோஷம்'
காட்சிகள்: 10-30—2-30
(பழையநேரப்படி)

(சி/3496)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள் வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

([illegible])


# அவசிய மருந்து வகைகள் நெடுந்தீவில் தட்டுப்பாடு

நெடுந்தீவு, ஏப். 20

நெடுந்தீவில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இங்குள்ள வைத்தியசாலையில் இரண்டு வைத்திய அதிகாரிகள் கடமையில் இருந்தனர். ஒரு வைத்தியஅதிகாரி தனது பொறுப்பில் மருந்துகளை எடுத்து வரக்கூடியதாக இருந்தது. தற்சமயம் ஒருவரே கடமையாற்றுவதால் மருந்து வகைகளை எடுத்து வருவதில் சிரமங்கள் எதிர் நோக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

(ஐ-111)

## தீ விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 20

பரலில் இருந்து மண்எண்ணெயை வெளியே எடுத்துக் கொண்டிருந்த வேளை தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தினால் ஒருவர் காயம் அடைந்தார்.

யாழ்ப்பாணம் ஐந்துசந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஓட்டுமடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் பிரேமச்சந்திரன் (வயது 24) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சிகரட் பற்ற வைப்பதற்காக தட்டிய தீக்குச்சியை எறிந்த சமயம் அதன் அருகில் விழுந்தே தீப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-139-15)

## பாராட்டு விழா

சுன்னாகம், ஏப். 20

அண்மையில் மணிவிழா கண்ட பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதனுக்கு பாராட்டுப் பெருவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிறு காலை 9.00 மணிக்கு திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இவ்விழாவில் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், பேராயர் அருட் திரு. ஜெபநேசன் அடிகள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரையும் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரையும் வழங்குவர்.

பேராசிரியர் தில்லைநாதனின் கலை, இலக்கிய, சமூக ஆய்வுத்துறைப் பணிகள் குறித்து பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் நா. சுப்பிரமணியன், பேராசிரியர் வை. நந்தகுமார், கலாநிதி சபா. ஜெயராசா, கலாநிதி க. குணராசா, கலாநிதி எஸ். சிவலிங்கராசா, வே. யுகபாலசிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் வழங்குவர். (ஐ-27)

## வழுக்கி விழுந்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 20

நிலத்தில் வழுக்கி விழுந்த சிறுவன் ஒருவர் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்தார்.

அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பாலச்சந்திரன் சுதர்சன் (வயது 7) என்பவரே உயிரிழந்தவராவார்.

சிமெந்துக் கட்டில் தலை மோதுண்டு ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்திய வேளையே, நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

ஓடி வந்தபோது ''போட்டிக்கோ'' நிலம் சறுக்கி, விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையின் பின் சடலம் தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

(இ-15)

## சமய அறிவுப்போட்டி

மூளாய் ஏப். 20

மூளாய் இந்து இளைஞர் மன்றம் சமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மூளாய் சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் நடைபெறவிருக்கும் சமயச் சொற்பொழிவுகளை செவிமடுக்கும் மாணவர்களுக்கிடையிலேயே இப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டியில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(ஐ-99)


## A/L DAY CLASS

முகாமைக் கணக்கீடு
காசுப் பாதீடு
21-4, Tue 8 A. m.
Mr. B. Bala

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுக்கான ஊக்குவிப்பு பரிசில்களுடன்
O/L, Yr. 10, 9&8
புலமைப்பரிசில் Yr. 5
Spoken English
புதியபிரிவு Sat., Sun. 3P.m
SHAMROCK

(55063)


## நன்றி கூறும் அறிவித்தல்

எமது கோயிலில் வழிபடும் அடியார்களுக்காகவும், கல்வி பயிலும் பள்ளிச் சிறுவர்களுக்காகவும் மற்றும் பொது மக்களுக்காகவும் எமது வேண்டுகோளை ஏற்று கோப்பாய் தெற்கு பழைய வீதியில் அமைந்த வீரபத்திரர் கோயில் ஒழுங்கையில் இருந்து பல கண்ணிவெடிகளை அகற்றி எமக்குப் பாதை ஒழுங்கு செய்ய அனுமதி தந்த இராணுவ பிரிகேடியருக்கும், அவரின் ஆணைப்படி தலைமைவகித்துச் செயற்பட்ட சுனத் பெர்னாண்டோ, கோப்பாய் இராணுவ பொறுப்பாளர் கலும் விக்கிரமசிங்கா, பாதை திறக்க இறுதிவரை நின்று உதவிபுரிந்த E. P. D. P. கோப்பாய் அமைப்பாளர் ரவி உதவியாளர் ஜோர்ச் ஆகியோருக்கும் இத்தால் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நடராஜா வேல்முருகன் ஐயர்
(பரிபாலகரும் பிரதம அர்ச்சகரும்)
சிவ ஞானவைரவர் தேவஸ்தானம்,
பழைய வீதி, கோப்பாய்.

(55061)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 500 க்கும் மேற்பட்ட சிறுவர்களின் பிறப்புச்சான்று பதியப்படவில்லை

## ஆய்வு மூலம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். மாவட்டத்தில் 500–க்கும் மேற்பட்ட பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சி பதியப்படாமலிருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் மேற்கொண்ட ஆய்வின் போதே பல சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமல் இருப்பது கண்டுபிடிக் கப்பட்டது.

குறிப்பிட்ட பகுதிகளில் நடத்தப் பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 500 சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதியப்படாமலிருப்பது தெரியவந்தது.

யாழ். மாவட்டம் முழுவதும் ஆய்வு நடத்தும் போது இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று சிறுவருக்கான அபிவிருத்தி நிலைய செயலாளர் பாலதயானந்தன் தெரிவித்தார்.

இதுவரையும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதியப்படாமலிருக்கும் சிறுவர்களின் பெற்றோர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

(ஐ-5)

### டோஹா விபத்துச் சம்பவம்

# 22 நாள்களின் பின் வந்து சேர்ந்த சடலம்

சுன்னாகம், ஏப். 20

மத்திய கிழக்கு நாடான டோஹாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பலியான சுன்னாகத்தைச் சேர்ந்த கா. ஜெயராஜா (52 வயது) என்பவரின் சடலம் 22 தினங்களின் பின் கடந்த வியாழனன்று அதிகாலை கொழும்பு வந்தடைந்தது.

டோஹா பொலீஸார் இச்சடலத்தை இலங்கை பொலீஸாரிடம் கையளித்தனர். பின்னர் அது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பில் குண்டு பரிசோதிக்கும் படையினரின் சோதனையின் பின், நேற்று முன்தினம் இராணுவ விமானம் மூலம் அச் சடலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது.

பிரஸ்தாப நபர் கடந்தமாதம் 29 ஆம் திகதி சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, பாகிஸ்தானியர்ஒருவரால் ஓட்டி வரப்பட்ட கார் பின்னால் வந்து மோதியதில் தலையில் காயமடைந்ததும், பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்ததும் தெரிந்ததே.

(ஐ-27)

# உடுவில், சுன்னாகத்தில் புதியமின்கம்பங்கள் நடுகை

சுன்னாகம், ஏப். 20

உடுவில், சுன்னாகம் பகுதிகளில் புதிதாக மின் கம்பங்கள் நாட்டி, கம்பிகளை இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் இப் பகுதிகளில் மின்கம்பங்கள் சேதமடைந்தும், அழிக்கப் பட்டும் இருந்தன.

தற்போது இவை செப்பனிடப்பட்டு வருகின்றன. சுன்னாகம், உடுவில் பகுதிகளில் குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-27)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 20

தெல்லிப்பழை அருள்மிகு காசிவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம்முற்பகல்11மணிக்கு இடம்பெறும்

(ஐ-8-30)

# காணாமற்போனோரின் உறவினருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப், 20

தற்போது யாழ். நகரில் தங்கியிருக்கும் சர்வோதயத் தலைவர் ஏ,ரி,ஆரியரத்தினா கைதானோர் காணாமற் போனோர் சங்கத்தினரைச் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பு நாளை செவ்வாய் பி.ப. 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். கைதானோர், காணாமற் போனோரின் பெற்றோர், உறவினர்அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-5)

# ஆப்கான் மோதலுக்கு சமாதான உடன்பாடு

## அமெரிக்காவின் ஏற்பாட்டில்

காபூல், ஏப். 20

ஆப்கானிஸ்தானில் போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்களிடையே இன்னும் ஒருவார காலத்தில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடை பெறும். இதன் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் பின்னர் ஜப்பானில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு ஆகியவற்றின் தலைமையில் இந்த பேச்சுக்கள் நடைபெறும் என்று அமெரிக்கத்தூதர் பில்றிட்சேர்ட்சன் தெரிவித்தார்,

காபூலில் பேச்சுக்கள் நடத்திவிட்டுத் திரும்பிய அவர் தலிபான் இயக்கமும் எதிரணியினரும் நேருக்கு நேர் சந்தித்துப் பேச இணங்கி இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்கு முன்னர் எந்தவிதமான இராணுவத் தாக்குதல்களையும் நடத்துவதில்லை என்றும்: சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உறுதி அளித்துள்ளன. யுத்த நிறுத்தம், கைதிகளை பரிமாறிக் கொள்வது உட்பட ஏனைய பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சமாதானப் பேச்சுக்களின் அடுத்த சுற்றுப் பேச்சு ஜப்பானில் நடைபெற வேண்டும் எனத் தாம் யோசனை கூறியதாக றிச்சேர்ட்சன் கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் புனரமைப்பு தொடர்பாக சர்வதேச மாநாடு ஒன்றும் ஜப்பானில் நடைபெற உள்ளது.

# இந்தியாவில் புதிதாக 8ஆளுநர்கள் நியமனம்

புதுடில்லி, ஏப். 20

இந்தியாவில் உத்திரப் பிரதேசம் உட்பட 6 மாநிலங்களுக்கும், புதுச்சேரி உட்பட இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு வெளியிடப்பட்ட அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

புதுச்சேரி யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநராக டாக்டர் ரஜனி ராய் என்ற பெண் நியமிக்கப்பப்பட்டுள்ளார். இவர் ஆர். எஸ். எஸ் இயக்கத்தின் தீவிர உறுப்பினராவார்.

மீசோராம் ஆளுநராக தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் ஏ. பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய ஆளுநர்களின் விவரம் வருமாறு:—

★ உத்தரப்பிரதேசம் :— சூரஜ்பான்(நாடாளுமன்ற முன்னாள் துணைத் தலைவர்)

★ குஜராத்:— அன்ஷுன் சிங் (ஓய்வுபெற்ற நீதிபதி.)

★ புதுடில்லி :— விஜய்கபூர் (முன்னாள் டில்லிதலைமைச் செயலர், பாரதீய ஜன தாவின் தேர்தல் அறிக்கைக் குழு உறுப்பினர்.)

★ கோவா:— ஜே. எப். ஆர். ஜேக்கப் (ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி,

★ மத்தியப் பிரதேசம் :— பாய்மகாவீர் (பா. ஜ. தேசியக்குழு உறுப்பினர்)

மகாராஷ்டிரா ஆளுநர் பி. சி. அலெக்சாண்டர் அப்பதவியில் மேலும் 5 ஆண்டுகள் நீடிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-10)

# பொல்பொட் வசித்த மரவீட்டின் முன்பாக அவரது சடலம் தகனம்

## 15 நிமிட நேர சடங்கில் 20 பேர் மட்டுமே

நொம்பென், ஏப். 20

கம்போடியாவின முன்னாள் கம்யூனிஸ்ட் ஆட்சியாளரும் 'கெமரூச்' இயக்கத் தலைவருமான பொல்பொட்டின் சடலம் கடந்த சனியன்று நாட்டின் வட பகுதியில்உள்ளசிறிய கிராமம் ஒன்றில் மிகவும்எளிமையான முறையில் நடை பெற்ற இறுதிச்சடங்கின் பின்னர் அவரது தோழர்களினால் தகனம்செய்யப்பட்டதாக 'கெமரூச்' வட்டாரங்கள் தெரிவித்தன.

1975, 79 காலகட்டத்தில் கம்போடியாவை ஆட்சி செய்த பொல்பொட்டின் சடலம் தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையேயான எல்லையோரமுள்ள சா- என்காம் பாஸ் என்ற கிராமத்தில் தகனம் செய்யப்பட்டதாகவும் கடந்த வியாழக்கிழமை சடலத்தை பத்திரிகையாளர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த மரக்கொட்டகைக்குமுன்னாலேயே அது தகனம் செய்யப்பட்டதாகவும் 'கெமரூச்' பேச்சாளர் கூறினார்.

பொல்பொட்டின் இறுதிச் சடங்கில் சுமார் 20 கெமரூச் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். சடங்கு ஆக 15 நிமிட நேரமே இடம்பெற்றது [illegible] இரங்கலுரை எதுவும் [illegible] வில்லை என்றும்''கெமரூச்'' பேச்சாளர் தெரிவித்தார்.

# பொல்பொட் மரணத்தை நம்ப அரசு தயக்கம்

நொம்பென், ஏப். 20

'கெமரூச்' இயக்கத்தின் சக்திமிக்க தலைவரான பொல்பொட்டின் மரணத்தை நம்புவதற்கு கம்போடிய அரசு தயக்கம் காட்டி வருகிறது.

தகனம் செய்யப்பட்டதாக 'கெமரூச்' இயக்கத்தினால் அறிவிக்கப்பட்ட சடலம் பொல்பொட்டினுடையது தான் என்பதை ஊர்ஜிதம் செய்யமுடியாதிருப்பதாக கம்போடிய அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

பொல்பொட்டின் சடலத்தை தன்னிடம் கையளிக்குமாறு கம்போடிய அரசு கெமரூச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

பொல்பொட்டின் மரணத்தை கம்போடிய மக்கள் பலர் நம்பத்தயங்குவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

(ஐ)

# காஷ்மீரில் 13 பேர் கொலை

ஶ்ரீநகர், ஏப். 20

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகளை பொலீஸாரும், இராணுவத்தினரும் தேடி வருகின்றனர்.

(ஐ)

# கறுப்பு தலை முடியுடன் பொல்பொட்டின் சடலம்

நொம்பென், ஏப். 20

மாரடைப்பால் காலமான பொல்பொட்டின் சடலம் வடகம் போடியாவில் தாய்லாந்து எல்லை அருகே உள்ள கிராமத்தில் அவர் கடைசியாக வசித்த சிறிய மரக் கொட்டகைக்கு முன்னால் கட்டில் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது.

அவரது உடலைப் பார்க்க செய்தியாளர்கள் சிலரே அனுமதிக்கப்பட்டனர். நீல நிற ஆடை அணிந்து காணப்பட்ட பொல்பொட்டின் சடலத்தில் அவரது தலைமுடி கருமையாக இருப்பதை பலரும் அவதானித்தனர்.

கடைசியாக சென்ற ஆண்டின் இறுதியில் கெமரூச் கெரில்லாக்களால் விசாரணை செய்யப்பட்ட போது ஊன்று கோலுடன் கூடிய பொல்பொட்டின் புகைப்படம் வெளியாகி இருந்தது. அந்தப் படத்தில் அவரது தலைமுடி முழுவதும் நரைத்து வெள்ளிக் கம்பிகள் போன்று காணப்பட்டன.

பொல்பொட்டின் சடலத்தின் புகைப்படத்தை வெளியிட்ட கம்போடிய பத்திரிகைகள் சில இதனைச் சுட்டிக்காட்டி அடிக்குறிப்பு வெளியிட்டுள்ளன.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரை மீட்க உதவுக

## தமிழ் எம். பிக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 20

அரச படையினரால்கைது செய்யப்பட்டு காணாமற் போயுள்ள 600 -க்கும் மேற்பட்ட எமது பிள்ளைகளை மீட்டுத்தர தமிழ் பேசும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் கைதானோர் காணாமற் போனோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ப. செல்வராசா தலைமையில் சங்கப் பணிமனையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சு. பரமநாதன், ஓய்வூதியர் சங்கத்தலைவர் எஸ். இராமநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

காணாமற்போனோர் சங்கமானது பிள்ளைகளை மீட்டெடுப்பதற்கு தன்னிச்சையாக இயங்க வேண்டும் என்றும் —

எந்தக் குழுவினரோ அல்லது அரசியல கட்சியினரோ உதவ முன்வரும் பட்சத்தில் பிள்ளைகளின் மீட்சி கருதி அதனை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-5)

# தலைநகரில் படையினர் மதுபோதையில்சோதனை

## யுவதிக்கு ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு, ஏப். 20

கொழும்பு பொறளையிலுள்ள சீவலி மகாவித்தியாலயத்தில் பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வெளியேறிய நான்கு யுவதிகளை இராணுவத்தினர் வழிமறித்து சோதனையிட்ட பிறகு பொலிஸ் பதிவைக் கேட்டனராம்.

அந்த யுவதிகளில் ஒருவர் கொழும்பு நகரிலேயே பிறந்து வளர்ந்தவர். அவர் தன்னிடம் பொலிஸ் பதிவில்லை எனக் கூறியபோது இராணுவத்தினர் அந்த யுவதியை மிரட்டியபோது பொலிஸ் பதிவு தேவையில்லை எனப் பொலிசாரே கூறிவிட்டனர் என சிங்களத்தில் அந்த யுவதி பதிலளித்தார்.

''வெடிய கதாகரண்ட எபா (அதிகம் கதைக்க வேண்டாம்) ஒயாவவெண்டபே (உன்னை விட முடியாது) என்று கூறி இராணுவத்தினர் அவனைத் தடுத்து பொலிஸாரையும் தூஷண வார்த்தைகளால் ஏசியதோடு அந்த யுவதியையும் தாறுமாறாகத் திட்டினாராம்.

மது அருந்திய நிலையில் கடமையில் இருந்த அந்த இராணுவத்தினரின் மோசமான வார்த்தைப் பிரயோகத்தால் ஏனைய யுவதிகள் தங்களது தோழியை தங்களோடு அனுப்புமாறு பலமுறை கெஞ்சினராம். அதன் பின்னரே அந்த யுவதி விடுவிக்கப்பட்டார். (ஐ-10)

அல்லைப்பிட்டி— ஊர்காவற்றுறை

# குடிதண்ணீர் விநியோக வேலை இன்று ஆரம்பம்

ஊர்காவற்றுறை, ஏப். 20

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் இண்டாவது கட்ட குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் வேலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

அல்லைப்பிட்டிப்பகுதியிலிருந்து ஊர்காவற்றுறைக்கு குடி தண்ணீர் வழங்குவதற்கான வேலைகளை ஜேர்மன் தொழில்நுட்பக் குழுவினர் மேற்கொணடுள்ளனர்.

ஊர்காவற்றுறை, கரம்பொன், பருத்தியடைப்பு, நாரந்தனை பொது மக்கள் இவ்வேலைகளுக்கு சிரமதானம் மூலம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. எக்ஸ். செல்வநாயகம் மேற்கொண்டுள்ளார். (ஐ-16)

# அடுப்பு மூட்ட பெற்றோல் ஊற்றிய யுவதி காயம்

## சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, ஏப். 20

அடுப்பு பற்றவைக்க மண்ணெண்ணெய்க்குப் பதிலாக பெற்றோலை ஊற்றிய போது பெற்றோல் கான் வெடித்ததில் இளம் பெண் ஒருவர் எரிகாயங்களுக்கு உள்ளானார். சனியன்று மாலை சாவகச்சேரி சிவன்கோயிலடியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். சத்தியா (வயது 16) என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று காலை யாழ். போதனா வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டார்.

(ஐ-117-139-15)

# விசர் நாய்க்கடி ஊசி மருந்து இல்லை

மூளாய், ஏப். 20

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வைத்திய சாலைகளில் விசர்நாய்க்கடிக்குரிய ஊசி மருந்து தீர்ந்துவிட்டது.

இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகள் தூர இடங்களில் உள்ள வைத்திய சாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போது அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரால் மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. (ஐ-99)


தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்



அருண்
புளொக் தயாரிப்பாளர்
அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


# உலகத்தில் யாழ்ப்பாணத்துக்கு பெருமையைத் தேடித்தந்த கலைஞன்

## வீரமணி ஐயருக்குப் பாராட்டு

நல்லூர், ஏப். 20

சைவத்தமிழ்ப் பண்புகளும் அடக்கமும் எளிமையும் நிறைந்தவராக வாழும் வீரமணிஐயா, தனது கலைத் திறமையினால் யாழ்ப்பாணத்திற்கு தமிழகத்தில் மட்டுமன்றித்தமிழர் வாழும் நாடுகளில்எல்லாம் பெருமை தேடித் தந்தவர். அவர் எங்கள் மண்ணின் மாபெரும் கலைஞன்- கவிஞர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அண்மையில் இயலிசை வாரிதி நா. வீரமணி ஐயருக்கு அளிக்கப்பட்ட பட்டமளிப்பு பாராட்டு விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லை ஆதீனம், இணுவில் மக்கள் கலைஞர்கள் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் இணைந்து பாராட்டு விழாவை நடத்தினார்கள். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகித்தார்.

முத்தமிழிலும் வல்லவரான அவரின் திறமைக்காக ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நல்லைக் குருமணி சாகித்திய சிரோன்மணி என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். கற்பகவல்லி போன்ற சிறந்த பக்திப்பாடல்களைத் தந்ததன் மூலம் உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கும் அவருக்கு மிக உயர்ந்த ''மகா வித்துவான்'' பட்டத்தை வழங்குவதில் நல்லைஆதீனம் பெருமைப்படுகிறது —என்றும் ஆதீன முதல்வர் தமது உரையில் தெரிவித்தார்.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தமது தலைமை உரையில் கூறியதாவது:-

தமது கலைப்புலமை ஊடாக நாடறிந்த கலைஞராக, படைப்பாளியாக அரை நூற்றாண்டுகளுக்கு மேல் கலைப்பணியாற்றி வரும் வீரமணிஐயா அவர்களின் திறமை எமது மக்களுக்குப் பயன்பட வேண்டும். இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் மூலம் பல்கலைக் கழகம் அவரது திறமையை மாணவர்களுக்குப் பயன்படச் செய்துள்ளது.

ருக்மணிஅருண்டேல்முதல் சௌந்தரராஜன் வரை அவரது கலைப்படைப்புக்கள் ஏதோ ஒருவகையில் தொடர்பு கொண்டுள்ளன. தமிழகத்திற்கும் நமக்குமிடையில் தொடர்புகள் இருந்தாலும் ஈழத் தமிழர்களின் கலை, பண்பாடுகள் தனித்துவமானவை. அந்தத் தனித்துவம் தொடர்ந்தும் பேணப்படநிறைய அபிமானிகளைப் பெற்றுள்ள வீரமணி ஐயாவின் பணிகள்தொடர வேண்டும் — என்றார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தமது உரையில் — திருஞானசம்பந்தர் சுத்தானந்தபாரதியார் போன்று இசையையும், கலையையும் வளர்க்க எமக்குக் கிடைத்தவர் வீரமணி ஐயா. ஒரு தெய்வீகக் கலைஞராக வரகவியாக விளங்கும அவரது கலைச்சேவை மேன்மேலும் தொடர இறையருள் கிடைக்க வேண்டும் — என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது உரையில் — எமது மொழிக்கும் சைவத்திற்கும் எழுச்சியூட்டும்இந்தக் கலைஞனின் கருத்துக்கள் நூல் வடிவில் வெளிவர வேண்டும். அதற்கு எமது தேவஸ்தானம் முக்கிய பங்கை ஏற்றுக்கொள்ளும். எமது பண்ணிலும் சரி தமிழகத்திலும் சரி எல்லோரது உள்ளங்களிலும் இடம்பெற்றவர் அவர் — என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை உபதலைவர் ஆ. மகாலிங்கம், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராஜா, கலாநிதி சபா. ஜெயராசா, ஆறு. திருமுருகன் உட்பட பலர் பேசினார்கள்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் விழா நாயகனுக்கு தங்கப்பதக்கங்கள் சூட்டியும், பொன்னாடை, போர்த்தும் மலர்மாலைசூட்டியும் கௌரவித்தனர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மகா வித்துவான் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். விழா நாயகர் இன்னிசை வாரிதி வீரமணி ஐயர்பதிலுரை வழங்கினார்.

முன்னதாக நல்லூர் முத்து விநாயகர்ஆலயத்தில் விசேட பூசை, வழிபாடுகள் இடம்பெற்று விழாநாயகர் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு மங்களவாத்திய இசையுடன் [illegible] பட்டார். (ஆ-103)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கமலாதேவி தியாகராஜா**
(Rasam Transport உரிமையாளர் மனைவி)

அன்னை மடியில்: **17—09—1935**
ஆண்டவன் சந்நிதியில்: **11—05—1996**

அன்புடனே எம்மையெல்லாம்
அரவணைத்து எம் வாழ்வில்
ஒளியூட்டிய அன்புத் தாயே!
உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்.

23, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,

(55059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரப் படையினரின் புத்தாண்டு நிகழ்வுகள்

## சனியன்று நடைபெற்றன

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 512ஆவது படை அணியைச் சேர்ந்த இராணுவத்தினரின் புத்தாண்டு தின விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம்சனி யாழ். சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன.

யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினரும், சர்வோதய அமைப்பின் தலைவருமான ஏ. ரி ஆரியரத்தினாவும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு படையினருக்கு இடையில் நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி மற்றும் விநோத உடைப் போட்டி, அழகு ராணிப் போட்டி, சறுக்குமரம் ஏறுதல், கிரிக்கெட், உதைப் பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கும், குழுக்களுக்கும் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் பதக்கம் சூட்டி, பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

மேற்படி விழாவிற்கு யாழ். நகர சிவில் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். (உ-7)

# யாழ். சர்வோதய நிலையத்தை ஆரியரத்னா திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், ஏப். 20

மகாத்மா காந்தியின் கிராம சுயராஜ்ய அடிப்படையில் கிராமங்களில் மாற்றத்தைக் கொண்டுவர விரும்புகின்றோம்.

சர்வோதய இயக்கத்தின் யாழ். மாவட்ட நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்த பின் உரையாற்றிய சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுண்டுக்குளிப் பகுதியில் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் சர்வோதய தலைமை நிலையத்தைச் சேர்ந்த திருமதி நீத்தா ஆரியரத்னா, எஸ். அபயநாயக்கா, எஸ். வேணுகோபால் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆரியரத்னா தமது உரையில் மேலும் கூறியதாவது:

வடபகுதியில் காணாமற் போவோர் பற்றிய செய்திகள் எமக்கு நாளாந்தம் கிடைத்துக் கொண்டிருந்தன. இவ்வாறு காணாமற் போனோரில் தற்போது 200 பேரின் பட்டியல்கள் என்னிடமுள்ளன. இதே போன்று தென்பகுதியில் 60 ஆயிரம் பேர்வரை காணாமற் போயுள்ளனர்.

நாம் அஹிம்சை வழியில் செயற்பட்டுக் கொண்டிருப்பதால் எமக்கு ஆபத்து எதுவும் ஏற்பட்டதில்லை. தற்பொழுது தெற்கில் 12 ஆயிரம் கிராமங்களில் வேலை செய்கிறோம். இதில் 3 ஆயிரம் கிராமங்களை பொருளாதார ரீதியில் வளர்ச்சியடையச் செய்துள்ளோம். கடந்த 40 வருடங்களாக சர்வோதயம் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. யாழ். மாவட்டத்தில் 178 கிராமங்களில் வேலை செய்தோம். தற்போது மீண்டும் எமது செயற்பாடுகளை இங்கு விஸ்தரிக்கவுள்ளோம்.

நாங்கள் எமது பணிகளைச் செய்து கொண்டிருக்கும் போது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சந்தர்ப்பம் எமக்கு ஏற்படும் – என்று அவர் கூறினார்.

திறப்பு விழாவுக்கு முன்னதாக கலாநிதி ஆரிய ரத்னாவும் அவரது குழுவினரும் யாழ். செயலகத்தில் அரச திணைக்கள தலைவர்களையும் அதிகாரிகளையும் சந்தித்துயாழ்ப்பாணத்து நிலைவரங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை, குருநகர் அகதிமுகாம், யாழ். ஆயர் இல்லம் போன்றவற்றுக்கும் இக் குழுவினர் விஜயம் செய்தனர். (ஐ-5)

# மட்டுவில் சரசாலைக்கு மின் வசதி இல்லை

சாவகச்சேரி, ஏப். 20

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பல பகுதிகளுக்கு இலங்கை மின்சார சபையால் ஜெனரேட்டர்களின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் சாவகச்சேரி நகரம், வரணி, மீசாலை, மிருசுவில் ஆகிய இடங்களில் ஜெனரேட்டர்களைப் பொருத்தி அவற்றின் மூலம் மின்விநியோகம் வழங்கப்படுகிறது. ஆனால் மட்டுவில், சரசாலைப்பகுதிகளில் மக்கள் நெருக்கமாக வசிக்கும் இடங்களுக்கு ஜெனரேட்டர் உதவி மூலம் மின்சாரம் வழங்க இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இராணுவ அதிகாரிகள், பொது மக்கள் கலந்துரையாடலில் இது விடயம் பற்றி ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 31)

# செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ். பிரதிநிதிகள் சந்திப்பு

வடபகுதி நிலைமைகளைப் பார்வையிட வந்திருந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலக செயலாளர் நாயகம் ஏவின் ஸ்ரனிஸ் புலத்சிங்கவும் சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறைச் சம்மேளன கொழும்பு வதிவிடப்பிரதிநிதி பொஸ்ரோன் கஸ்ரோவும் யாழ், அரச அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் செயற்குழுவினரையும், உத்தியோகத்தர்களையும் நேற்று முன்தினம் இவர்கள் சந்தித்தனர்.

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ளசெஞ்சிலுவைச் சங்கக் கிளை அலுவலகங்களுக்கும் இவர்கள்விஜயம் செய்தனர்.

கோப்பாய், நல்லூர், உடுவில், பளை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டிப் பகுதிகளிலுள்ள செஞ்சிலுவைச் சங்க கிளைகளுக்கும் நேற்று அவர்கள் விஜயம் செய்யவும் இருந்தனர்.

இரு பிரதிநிதிகளும்இன்று இங்கிருந்து கொழும்பு திரும்புவர். (ஐ-5)


## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் வழிகாட்டியும், ஆலோசகருமாகிய
வண. பிதா இருதயதாஸ்
அவர்களின் அன்புத் தந்தையார்

**S. N. பயஸ்**

அவர்களின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கத்தோலிக்க அருங்கொடை
மறுமலர்ச்சி இயக்கம்.

(55049)



## புலமைப்பரிசில் வகுப்புக்கள்

காரை V.A. சிவஞானத்தின் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வகுப்புக்களும் பரீட்சைகளும் யாழ். நகரில் ஆரம்பமாகி உள்ளன.

விவரங்கள் அறிய
B. P. பாஸ்கரன்
எடிசன் அக்கடமி

(55025)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அப்பாத்துரை கணேசு**
(இளைப்பாறிய ஆசிரியர்)

மண்ணகம்: **3-12-1923**
விண்ணகம்: **22-3-1998**

திதி: 21-4-98 நாளை செவ்வாய்க்கிழமை

எமது வாழ்வின் தெய்வமே, எங்கள் அணையாத தீபமே, எங்கள் வீட்டின் ஒளி விளக்காய்த் திகழ்ந்தீர்கள்! உங்கள் திரு உருவம் என்றுமே மனதை விட்டு அகலாது! உங்கள் பிரிவால் ஆறாத்துயரத்துடன் விம்முகின்றோம், நீங்கள் மறைந்து 31 நாள்கள் ஆகிவிட்டாலும் வழிகாட்டும் தெய்வமாக என்றென்றும் நின்று நிலைத்திட, உங்கள் ஆத்மா சாந்தியடைய நீங்கள் தீபமேற்றி வணங்கிய வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (21-4-98) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், சகோதரி.

அப்பிளானை,
கோப்பாய் மத்தி.
கோப்பாய்.

(54994)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





**சின்னத்தம்பி இராஜரட்ணம்**
மலர்வு: **22 - 03 - 1938**

**இராஜரட்ணம் கௌசலாதேவி**
மலர்வு: **18 - 04 - 1975**

அநியாய அழிப்பு: **20 - 04 - 1996**

அன்பு, பண்பு, பாசம் ஆகிய முக்குணங்களிலும் சிறந்து எங்கள் இல்லறத்தின் விடிவிளக்காய்த் திகழ்ந்த உங்களை மெழுகாக்கி நிற்கின்றோம். கொடியவரின் கொலை வெறியால் எங்களை ஆறாத்துயரில் விட்டுச் சென்ற எங்கள் அப்பா, அக்காவே .....!

நீங்கள் வருவீர்கள் எனக்காத்திருக்க
நெஞ்சமது துடித்திட நினைவுகள் தந்துவிட்டு
நீங்கள் எம்மை பிரிந்து இரண்டாண்டு
சென்றனவே! நீங்கள் எம்மைப் பிரிந்தாலும்
எத்தனை ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சில் என்றென்றும் தொடரும்!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

இராஜவீதி,
[illegible]
நீர்வேலி.

(55050)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

27 நாள் நிரம்பிய பிறிமா கைலன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். [சி/3488]

நாற்சாரம் வீட்டு ஓடுகளும், மரங்களும் முழுமையாக விற்பனைக்கு உண்டு. ரூபா 2,00,000 2 மணி-5 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு: திரு. த. ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [54998]

முகமாலையில் அமைந்துள்ள தென்னந் தோட்டம் 6 ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, சாவகச்சேரி, அல்லது க. கணகலிங்கம் முகமாலை. [சி/3477]

### தவறிவிட்டது

நடராசா பிரபாகரன் (ஆசிரியர், யா/செம்பியன் பற்று அ.த.க. பாடசாலை) என்பவரது தொழில்சார் அடையாள அட்டை நல்லூருக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். மணற்பாதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி, அல்லது 292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், [55036]

### ஆட்டுக்கடா விற்பனைக்கு

எமது சங்கத்தில் ஆட்டுக்கடா இரண்டு விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 24. 04. 98 ஆம் திகதிக்கு முன் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். (சி/ 3489)

### யாழ்ப்பாணம்

வானொலியில் நீங்கள் அடிக்கடி கேட்கும் நாடகங்களை எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். வீரகேசரியில் பிரசுரமான கட்டுரைகள் எங்களுக்கும் கிடைக்கும். [54525]

### இசைவகுப்புகள்

வீணை, வயலின், புல்லாங்குழல், வாய்ப்பாட்டு, றெக்கோடர், இங்கிலிஷ்மென்ரலின், யப்பான் மென்ரலின், ஓர்கன், கிற்றார், மெலோடிக்கா வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன் 16/2, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [55051]

### தேவை

புதிய பாவித்த யப்பான் மென்ரலின், இங்கிலிஷ்மென்ரலின் தேவை. தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [55052]

### தெளிவாகப் பார்க்க


ரி.வி. நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் B. Sc. Ceylon Dip In Electronic Engineering London) — 284, ஸ்ரான்லி வீதி நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (சி/3295)

### திருத்துதல்

சகல விதமான தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மிகச் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு; ''ஜெசீவா'' தட்டச்சு இயந்திர திருத்த சேவை. இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி (பரமேஸ்வராச்சந்தி). (55019)

## நன்றி நவிலலும் வீட்டுக் கிரியை அழைப்பும்

தோற்றம்: 14 — 04 — 1913



மறைவு: 21 — 03 — 1998

**பண்டிதர் க வேலுப்பிள்ளை B.A.**

கடந்த 1998— 03 — 21 இல் இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியோர், அனுதாபம் செலுத்தியோர், மலர் வளையம் வைத்தோர், அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எங்களின் நெஞ்சம்நிறைந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் வணக்கத்துடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

கல்வயல், சாவகச்சேரி.

(சி/3468)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 20-04-1998



**செல்வி த. சங்கவி**

அல்லாரை வீதி, மீசாலையைச் சேர்ந்த
**தவீந்திரன் - ஜானகி**
தம்பதிகளின் செல்வப்புதல்வி
**சங்கவி**

தனது பிறந்த தினத்தை திருநெல்வேலியிலுள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மாமார், அப்பம்மா, வாணிச்சித்தா, பெரியம்மா, பெரியப்பா, அத்தைமார், மாமாமார், ஜெய்சாந்த் மச்சான், பைராஅக்கா, ரகுவர்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் அருள் பெற்று சீருஞ் சிறப்புடன் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

வே. இராசரத்தினம்
(தாத்தா)

மீசாலை. (55029)

## நிபுணத்துவ உளநல, மூளை, நரம்பு சிகிச்சை ஆலோசனை

இருபது வருடங்களுக்கு மேலாக சுகாதாரத் திணைக்களத்தில் மனோவைத்திய நிபுணராகக் கடமையாற்றிய M. B B S. (Ceylon) M. R. C. Psych (England) CONSULTANT NEURO PSYCHIATRIST அவர்களினால் வழங்கப்படும்.

பார்வையிடும் நேரங்கள் தினமும் காலை **8.00** மணிமுதல் மாலை **5.00** மணி வரைக்கும்.

விலாசம்:-
91, BROWN ROAD,
நீராவியடி, யாழ்ப்பாணம். (54990)

## ஓர் ஆண்டு பூர்த்தியும் நினைவஞ்சலியும்





அமரர்
**பொன்னர் முருகேசு**
(பப்பா)
(ஓய்வு பெற்ற C. W. E. வாச்சர்)

திருமதி
**முருகேசு நாச்சியார்**
(பூமணி)

காலமான அன்பு உள்ளங்களின் ஆத்ம சாந்திக்காக இன்று **20 - 04 - 98** திங்கட்கிழமை இறைவன் பிரார்த்தனை நடைபெறும்.

பிள்ளைகள், சகோதரர்கள்,
கனகரத்தினம் குடும்பம்.

பருத்தித்துறை வீதி,
3 ஆம் ஒழுங்கை,
ஆரியகுளம்.

(55041)

## நெஞ்சோடு நீங்காத ஓராண்டு நினைவுகள்

தாயின் மடியில்: 13 — 10 — 1946



தயாபரன் அடியில்: 01 — 05 — 1997

**அமரர் ச. கனகசபாபதி**

பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் இருப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே!
நீங்கள் மறைந்து ஓராண்டு
ஆனதையா ஆயினும்
ஆறவில்லை உங்கள் நினைவு
ஓராண்டாய் உங்கள் குரல் கேட்காது
ஓய்ந்ததையா என் உள்ளம்!

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

பிரிவால் துயருறும்:
மனைவி
க. சௌபாக்கியலட்சுமி

(50036)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சாய்ந்து ஆடும் மத்தியஸ்தமா?

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில், சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கேட்டுக் கொண்டால் மட்டுமே அமெரிக்கா மத்தியஸ்த நடவடிக்கை எதிலும் ஈடுபட முன்வரும்.

இவ்வாறு கொழும்புக்கு எட்டு மணி நேர விஜயத்தை மேற்கொண்டிருந்த, அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதுவர் பில் றிச்சார்ட்சன் தெரிவித்துச் சென்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவின் நிரந்தரத் தூதுவராகப் பணிபுரியும் பில் றிச்சார்ட்சன் குழுவின் கொழும்பு விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக நோக்கப்பட்டது.

மிகக் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் —அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளை, பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துக் கொண்டதன் பின்னர்— அந்நாட்டின் மிக உயர்ந்த அதிகாரியின் வருகையாகவும் பார்க்கப்பட்டது.

ரிச்சார்ட்சன் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து 90 நிமிட நேரம் பேசினார். எதிர்பார்க்கப் பட்டதுபோல எதிர்க்கட்சி தரப்பினரையோ, தமிழர் தரப்பினரையோ சந்திக்கவில்லை.

அவர் தெரிவித்துள்ள தகவல்கள், கருத்துக்கள் முழுக்க முழுக்க அரசாங்கத்துக்கு ஆதரவானவையாகவும், சார்புடையனவாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. மொத்தத்தில் இலங்கை அரசின் — சந்திரிகா அரசின் — நிலைப்பாட்டை உரத்துக் கூறும் ஒலிபெருக்கியாகவே காணமுடிகிறது!

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு சமரசப் பேச்சுக்கான சூழலை உருவாக்க வேண்டும். அரசாங்கத்தின் தீர்வுப் பொதிக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும். சந்திரிகாவின் அரசமைப்புச் சீர்திருத்தம் அமைதியான தீர்வைக் காண்பதற்கு ஏதுவாக அமையும். இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை அரசு சரியான வழியிலேயே செல்கிறது. மறுதரப்பினர் எதிர்மறையாகச் செயற்படுகிறார்கள் — என்று அமெரிக்கத் தூதுக்குழு தெரிவித்துள்ளது. இலங்கை அரசுத் தலைவர்கள் கூறுவதையே அமெரிக்கத் தூதுக்குழுவும் திருப்பிச் சொல்லியுள்ளது; வலியுறுத்தி உள்ளது!

முழுக்க முழுக்க அரசின் பக்கம் சார்ந்து பேசியுள்ளது அமெரிக்கத் தூதுக்குழு. அது மட்டுமல்ல; தீர்வு முயற்சிக்கு அமெரிக்கா பங்களிக்க முடியும் என்று அரசு கருதினால் இதுவிடயத்தில் உதவத் தயார் என்று பொடி வைத்தே தெரிவிக்கப்பட்டுள்ளது!

இத்தகைய ஒரு பின்னணியில், இனப்பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கா பக்கச் சார்பில்லாத முறையில் செயற்படும் என்று நம்புவதற்கான ஏது எதுவும் இல்லை. மத்தியஸ்தர் ஒரு பக்கம் சாய்ந்து ஆடினால் அதற்குப்பெயர் மத்தியஸ்தம் இல்லையே! அப்படி ஒரு மத்தியஸ்தம் தேவைதானா...?

# கிழக்கிலங்கையின் கல்வி நிலைமை மேலும் வீழ்ச்சி கண்டு வருகிறது

இந்நாட்டில் எழுத்தறிவுள்ளோர் மிகவும் குறைந்து காணப்படும் மாகாணம் கிழக்கு மாகாணமாகும். இலங்கையில் எழுத்தறிவுள்ளோர் 87.2 சத வீதம் எனக்கணக்கிடப்பட்டுள்ளது ஆனால்கிழக்குமாகாணத்தில் எழுத்தறிவுடையோர் 74.2 சத வீதமானோரே. இம் மாகாணத்தை உள்ளடக்கிய மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களே இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் ஆகக் குறைந்த எழுத்தறிவுடையோர் உள்ள மாவட்டங்களாகும்.

## அது சீரடைவதற்கு யுத்தம் நிறுத்தப்படுவது மிகஅவசியம்

அதிலும் மட்டக்களப்பு மாவட்டமே இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும் ஆகக்குறைந்த எழுத்தறிவுடையோரைக்கொண்டது. இம்மாவட்டத்தில் எழுத்தறிவுடையோர் ஆகமொத்தம் 68.3 சதவீதத்தினர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே போன்று அம்பாறை மாவட்டம் 75 சதவீதம் என்றும் திருகோணமலை மாவட்டம் 79.5 வீதம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் எழுத்தறிவுள்ளோர் கூடுதலாக உள்ள மாவட்டங்களில் யாழ்ப்பாணம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. அங்கு எழுத்தறிவுள்ளோர் 93.4சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கையில் ஆகக் கூடிய எழுத்தறிவுடையோர் உள்ள மாவட்டம் கம்பஹா மாவட்டம் என்றும் இங்கு எழுத்தறிவுடையோர் 94.6 சதவீதம் எனவும்கணக்கிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இரண்டு அனர்த்தங்களை அது எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஒன்று 1978 இல் வீசிய சூறாவளி. அடுத்தது இப்போது நடைபெறும் வடகிழக்கு யுத்தமாகும்.

### சூறாவளியால் பாதிப்பு

சூறாவளியின்போது அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதி மட்டக்களப்பு மாவட்டமாகும். கிழக்கு மாகாணத்தில் சூறாவளி காரணமாக ஏறத்தாள 57 சத வீதமான பாடசாலைகள் பாதிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 65 சத வீதமான பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்தன. இவற்றை புனரமைப்பு செய்து கட்டி எழுப்புகின்ற வேளையில், கடந்த 15 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் போர் காரணமாக இன்னும் அதிகமான பாடசாலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடுப்பகுதி முதல் மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கைகள் காரணமாக மீண்டும் கிழக்கு மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையான பாடசாலைகள் முற்றாகப்பாதிக்கப்பட்டன. பல பாடசாலைகள் ஏறத்தாள இரண்டு வருடங்களாக அகதி முகாம்களாக செயற்பட்டு வந்துள்ளன. இன்னும் பல பாடசாலைகள் இராணுவமுகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகை. 12லட்சத்து 36 ஆயிரமாகும். இம் மாகாணத்தில் 40 பிரதேச செயலாளர் பிரிவுகள் அமைந்துள்ளன. மொத்த விஸ்திரணம் 9,996 சதுர கிலோ மீற்றர்களாகும். இது இந் நாட்டின் மொத்த விஸ்தீரணத்தில் 15 சத வீதமானது.

இம்மாகாணத்தில் மொத்தமாக 978 பாசாலைகள் அமைந்துள்ளன. இவற்றில் 957 மாகாணப் பாடசாலைகள்ஆகும். தேசியபாடசாலைகள் 21மட்டுமே. மாவட்டரீதியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 315பாடசாலைகளும் திருகோணமலை மாவட்டத்தில் 266 பாடசாலைகளும், அம்பாறை மாட்டத்தில் அம்பாறை— கல்முனை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கி மொத்தம் 397 பாடசாலைகளும் அமைந்துள்ளன மொத்த. மாணவர்கள் தொகை மூன்றரை இலட்சம் என்றும் மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கை 12 ஆயிரம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்குப் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ''கல்வி வளர்ச்சியில் கிழக்கு மாகாணம் எதிர்நோக்கும் சவால்கள்'' என்பது பற்றி உரையாற்றினார்.

அவரது பேச்சு இங்கு கட்டுரை வடிவில் தொகுத்து தரப்படுகின்றது.

### இராணுவக் கட்டுப்பாட்டில் 30 வீதம்

இம்மாகாணத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள பகுதி. மற்றையது இராணுவக் கட்டுப்பாடற்ற தமிழீழவிடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளாகும். மாகாணத்தின் மொத்த விஸ்தீரணத்தில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதி 30 வீதமாகும்.

### 13,000 பேர் காணாமற் போயினர்!

சென்ற 1990 ஆம் ஆண்டு ஜூன்மாதம் நடுப்பகுதி முதல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக கிழக்கு மாகாணத்தில் காணாமற் போனோர் எண்ணிக்கை ஏறத்தாள 13 ஆயிரம் ஆகும். விதவைகள் எண்ணிக்கை சுமார் 8 ஆயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ் விதவைகளில் 18 வயது முதல் 21 வயதுடையோர் ஏறத்தாள60 விகிதமாகும். பெற்றோரை இழந்து அனாதைகள் ஆகியுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 6 ஆயிரம் எனக்கணக்கிடப்பட்டுள்ளது.

இம் மாகாணத்தில் தொடர்ந்து நடைபெறுகின்ற ஷெல் தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள், துப்பாக்கி வேட்டுக்கள், சுற்றி வளைப்பு போன்றவற்றால் பெரும்பாலான மக்கள் தங்கள் வீடுகள் — உடைமைகள் போன்றவற்றை இழந்து மீண்டும் மீண்டும் அகதிகளாக வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் வாழ்வதற்கேற்ற அடிப்படை வசதிகள் இம்மாகாணத்தில் மிகவும் குறைவு. பெண்களேஅநேகமாக குடும்பப் பொறுப்பை ஏற்கின்ற காரணத்தால் அவர்கள் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்படைந்துள்ளனர். இம்மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ் குடும்பத்திலும் ஏதாவது ஓர் அனர்த்தம் ஏற்பட்டேயிருக்கும். போஷாக்கின்மை மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் உடல் ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இம் மாகாணத்தில் பெற்றோர்களை நம்பிவாழும் 14 வயதிற்குகீழ்ப்பட்டகுழந்தைகளின் எண்ணிக்கை 41.8 சதவீதமாகும். ஆனால் தேசியரீதியாக இது 35.3 சதவீதமாகும். எனவே இம் மாகாணத்தில் நாட்டில் எந்தப் பகுதியையும் விட பெற்றோர்களுக்கு சுமை அதிகமாகும்.

### 64 மாணவருக்கு ஓர் ஆசிரியர்

ஆசிரியர் பற்றாக்குறை கிழக்கு மாகாணத்தில் அதிகம். இம்மாகாணத்தின்ஆசிரியர் பற்றாக்குறை ஆறாயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 64 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அவல நிலையுள்ளது. இலங்கையில் 24 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற சராசரி நிலவும் பொழுது கிழக்கு மாகாணத்தில் அனேகமானபாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இவ்வித்தியாசம் காணப்படுவதில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவாங்கரை பகுதிகளும், வாகரைப் பிரதேசமும், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், ஈச்சலம்பற்றை ஆகிய பிரதேசங்களும் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்னடைவுள்ள பகுதிகளாக கணக்கிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் ஆசிரியர்களை கவரக் கூடிய நிலைமை குறைவாகவேஉள்ளது. ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் இல்லை. போக்குவரத்து சீர்கேடுகாரணமாக ஆசிரியர்கள் நேரத்திற்கு பாடசாலை செல்வது தடைபடுகின்றது.

மாணவர்கள் தரையிலும் மரநிழல்களின்கீழும்இருந்தே கல்வி கற்கவேண்டியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 216 சல கூடங்களும், 142 மல கூடங்களும், 119 கிணறுகளும் பற்றாக்குறையாக உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய 270 லட்சம் ரூபா தேவையெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே போன்று திருகோணமலை மாவட்டத்தில் 118 சலகூடங்களும் 161 மல கூடங்களும் 45 ணறுகளும் பற்றாக்குறையாகவுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய 180 லட்சம் ரூபா தேவையெனக் கணக்கிடப்பட்டுள்ளது. முடிவுறாத நிலையில் உள்ள பாடசாலைக் கட்டடங்களை பூர்த்தி செய்ய 5 கோடி ரூபா தேவை என்றும் மேலும் பாடசாலைக் கட்டடங்களை அமைக்க உடனடியாக 10 கோடி ரூபா தேவை என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் அமைக்கப் படவுள்ளன. இவற்றை நிர்வகிக்க நான்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த கல்வி வலயங்களில் கடமை செய்ய கல்வி நிர்வாக சேவை உத்தியோகஸ்தர்கள் 300 பேர் தேவைப் படுகின்றனர். ஆனால் தற்போது இருப்பவர்களோ 40 பேர் மட்டுமே, இவர்களில் 15 பேர் இன்னும் இரண்டாண்டு காலத்தில் ஓய்வு பெறவுள்ளனர்.

### கும்பகர்ணன் நிலையில்

இவை எல்லாம் சீர்திருத்தப்பட வேண்டுமானால் கடந்த 40 ஆண்டு காலத்திற்கு மேலாக புரையோடிப் போய் இருக்கும் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வு காணப்படல்வேண்டும். இந்நாட்டின் முதுகெலும்பாக விளங்குகின்ற வலுமிக்க இளைஞர் சமுதாயத்தை கண்மூடித் தனமாகப் பலிகொள்ளும் வடக்கு - கிழக்குப் போரை ஒருமுடிவுக்கு கொண்டுவர வேண்டும். போரை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் போரில் ஈடுபட்டுள்ள அரசு படைகளும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும், அதன் பின்பு இருதரப்பினரும்மூன்றாம் தரப்பு மஸ்தியஸ்தத்துடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். இது தான் இன்றைய யதார்த்த நிலை. இந்த யதார்த்த நிலையை சர்வதேச சமூகமும் உணர்ந்துள்ளது. அதே வேளை இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களும் அரசியல் தலைவர்களும் உணர்ந்துள்ளனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் கும்பகர்ணன் நிலையிலே தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து வேறு எவருடனும் பேசுவதன் மூலம் இனப்பிரச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

சித்திரை - 08
செவ்வாய்க்கிழமை

திதி: நவமி
காலை 7.04 வரை
தசமி
வைகறை 5.15 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பின் இரவு: 3.06 வரை
சுபநேரம்: 10.31-12.01
ராகு காலம்: 3.01- 4.31
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

யுத்தங்கள், புரட்சிகள் முதலான உலகின் மாபெரும் விவகாரங்களெல்லாம் கட்சிகளாலேயே வளர்க்கப்பட்டு விளைந்திருக்கின்றன.

- பெஞ்சமின் பிராங்ளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கத் தகடு கட்டணம் குறைப்பு

தென்மராட்சி, ஏப் 20

துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுக்கான கட்டணம் ஐந்து ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

இப்பகுதி பொது அமைப்புகள் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி துவிச்சக்கரவண்டி இலக்கத் தகட்டின் கட்டணத்தை ஐந்து ரூபாவாக குறைக்க அனுமதி வழங்கியுள்ளார்.

இன்று முதல் துவிச்சக்கர வண்டி இலக்கத்தகடு ஐந்து ரூபாவுக்கு வழங்கப் படுமெனத்தெரிவித்தார்,

(ஐ -117)

# கொழும்பில் மேதின நிகழ்வுகளுக்கு வாகனங்கள் பயன்படுத்தத் தடை

கொழும்பு, ஏப்.20

மே முதலாம் திகதி நடைபெறவிருக்கும் மேதினத்தை ஒட்டிய கூட்டங்களுக்கவோ அல்லது ஊர்வலங்களுக்காகவோவாகனங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று பொலீஸார் அறிவித்திருப்பது அரசியற் கட்சிகள் மத்தியில் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தினுள் நடைபெறுகின்ற மேதினக் கூட்டங்களுக்கு வாகன அணிகளைப் பயன்படுத்தக்கூடாதென்றும், பாதுகாப்புக் கருதியே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்கொழும்புப் பிராந்தியப் பொலீஸ்மா அதிபர் சகல அரசியற்கட்சிகளுக்கும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசியற் கட்சிகளிடம் வினாவிய போது அநேகமான அரசியற் கட்சிகள் தாம் நடத்தப் போகும் மேதினஊர்வலங்களில் வாகன அணிகளைக் கொண்டு செல்வது குறித்து ஆலோசித்து வருவதாக தெரிவித்தன.

இதுகுறித்து கருத்துத்தெரிவித்த ஜே.வி.பி கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவங்ஸ, இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று தெரிவித்தார்.

ஜே.வி.பியினரின் மேதின ஊர்வலம் வெள்ளவத்தை குரே மைதானத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. கூட்டம் பி.ஆர்.சி. மைதானத்தில் இடம்பெறும். இதற்காக நாம் வானக அணிகளைஏற்கனவே ஒழுங்கு செய்துள்ளோம், பாதுகாப்பு என்ற காரணத்திற்காக இப்படிக் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. நமது வாகன அணிகளில் இடம் பெறும் வாகனங்களின் இலக்கங்களைகொடுக்கத் தயாராக உள்ளோம். இது தொடர்பாக நிலைவரத்தை விளக்கிப் பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை எழுதியுள்ளோம்— என்று அவர்மேலும் தெரிவித்தார்.

(ஐ-ரீ10)

## கிழக்கிலங்கையின்...

(ஏழாம் பக்கத் தொடர்)

சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது. ஏனைய கட்சிகளுடன் பேசிப் பயனில்லை. எமது கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேசியும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது. இதுதான் உண்மையான நிலை. அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகள் பங்குபற்றாத எந்த ஒரு தீர்வும் இனப்பிரச்சினைத் தீர்வாக அமையவும் முடியாது. அதேபோன்று அவர்களைத் தனிமைப் படுத்தி இந்த நாட்டில் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தவும் முடியாது. இந்த யதார்த்த நிலையை உணர்ந்து செயற்பட சகலரும் முன்வரவேண்டும்.

(★)

## 5 கிராம அலுவலர்களுக்கு நிரந்தர நியமனம் இல்லை

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த 1992 ஆம் ஆண்டு தற்காலிக கிராம அலுவலர்களாகக்கடமையைப் பொறுப்பேற்ற ஐந்துபேருக்கும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்பட வில்லை.

மிகவும் கஷ்டமானகாலப் பகுதியில் இப்பிரிவில் கடமையாற்றிய இவர்கள் தங்களை நிரந்தரமாக்குமாறு உயர் அதிகாரிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விண்ணப்பித்தும் இது விடயமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் இக் கிராம அலுவலர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

(ஐ-16)

## பாடசாலை திருத்தவேலை

ஊர்காவற்றுறை ஏப் 20

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தீவகத்தின் முதன்மையான இக்கல்லூரி இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதத்திற்குள்ளாகியது. தற்போது ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புக்கான திருத்த வேலைகள் நடைபெறுகின்றன.

(ஐ-16)


## மாதாந்த மாதிரிப் பரீட்சை 3

ஆண்டு 6 - 11 வரை

- ★ 25 - 04 - 98 காலை 8 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
- ★ பதிவு செய்த நிறுவனங்கள் 24 - 04 - 98 (வெள்ளிக்கிழமை) வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளவும்.
- ★ இதுவரையில் பதிவு செய்து கொள்ளாத நிறுவனங்கள் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

பரீட்சை முடிந்தபின் வினாத்தாள்களை 27 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம்.

**விக்னா கல்வி நிறுவனம்**

விக்னா பரீட்சைப் பகுதி
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (55055)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
அருட்திரு. A. I. பேர்ணாட் அடிகளாரின்
அன்புத் தந்தை

அமரர்

**அன்ரனி அல்போன்ஸ்**

அவர்கள் இரணைப்பாலையில் காலமாகியதையிட்டு அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அலுவலக ஊழியர்கள்.

புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம். (55057)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அதிபர்
அருட்திரு. அ.இ. பேர்ணாட் அடிகளாரின்
பாசமிகு தந்தை

**அமரர் அ. அல்போன்ஸ்**

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனிடம் இறைஞ்சுவதோடு, அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்

புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம். (55056)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## சீருடைத்துணி வழங்கல்


யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் சீருடைத் துணிகளை வழங்குவதற்கு புடைவை / கால் உறை (கறுப்பு/ காக்கி) கையிருப்பில் விற்பனைக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

சாம்பல் நிற காற்சட்டைத் துணி 550 மீற்றர்
(Grey Synthetic Suiting)
கால் உறை(கறுப்பு/காக்கி)
228 சோடி
(Socks)

விண்ணப்பதாரர்கள் மேற்குறித்த துணியினது 6'' x 6'' மாதிரித்துண்டுடன் தங்கள் கூறுவிலைகளை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 29 - 04 - 98 காலை 10 மணிக்கு முன்னதாக நேரிலோ அல்லது கடித மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கூறுவிலைகள் அன்று காலை 10 - 30 மணிக்கு திறக்கப்படும். கூறுவிலைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சீர் உடை வழங்கல்'' என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஜனனம்: 05 - 04 - 1935
மரணம்: 21 - 03 - 1998

அமரர்

**சின்னையா அப்புத்துரை**


(ஓய்வு பெற்ற சாரதி, சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

அன்பாக, பாசமாக எம்முடன் வாழ்ந்தீரே!
பாதிதனிலே எம்மையெல்லாம் விட்டகன்றீரே!
உங்கள் நினைவலைகளால் வாடுகின்றோமே எனினும்
நீங்கள் எம் நினைவில் என்றும் இருப்பீர்கள்!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பெறாமக்கள், மைத்துனர்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (55053)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 12 — 01 — 1926
மறைவு: 21 — 03 — 1998

**அமரர் கதிரிப்பிள்ளை செல்வரட்ணம்**

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், நேரில் வந்து அனுதாபம் கூறியவர்களுக்கும் மற்றும் சகல உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 20 - 04 - 98 திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 4, செட்டித்தெரு,
நல்லூர். [55054]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு புலிகள் பேச்சுக்கு வர வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் கோருகிறார்

கொழும்பு, ஏப். 20

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வொன்றைக் காணும் வகையில் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டும். இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருப்போர் ஒரு முடிவைக் காண வேண்டியது அவசியமாகும். அதேவேளை இந்த யுத்தத்தினால் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்பதை விடுதலைப் புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் 8 மணி நேர விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஐ. நா. சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர தூதுவர் பில்றிச்சேர்ட்சன் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்க தகவல் நிலையத்தில் நடைபெற்ற மேற்படி பத்திரிகையாளர் மாநாட்டில் றிச்சேர்ட்சன் தெரிவித்த முக்கிய தகவல்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தது தெரிந்ததே.

அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட மற்றும் சில கருத்துக்கள் வருமாறு:

★ இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும் என்பதற்கே எமது நாடு ஆதரவு வழங்குகின்றது. எனவே இலங்கை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான யோசனைகளுக்கு சகல கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும்.

★ இலங்கை அரசு இனப்பிரச்சினை விவகாரத்தில் சரியான பாதையிலேயே செல்கின்றது என்று அமெரிக்க அரசு நம்புகிறது. ஆனால் மறு தரப்பினர் எதிர் மறையான போக்கினையே கொண்டுள்ளனர்.

★ அரசு இனப்பிரச்சினை விவகாரத்தை மிகுந்த நேர்மையுடனேயே கையாளுகின்றது என நம்பும் அதே வேளை உத்தேச அரசமைப்பு சீர் திருத்தம் குறித்தும் இலங்கையிலுள்ள அனைத்து ஜன நாயகக் கட்சிகளும் ஒத்துழைப்பதை அமெரிக்கா ஊக்குவிக்கும்.

★ தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தனி நாட்டுக்கோரிக்கைகளுக்கு ஈடாக தமிழ் நிருவாகப் பிராந்தியம் உட்பட பிராந்தியங்களுக்குக் கூடுதலான அளவு அதிகாரப் பகிர்வை வழங்கும் வகையில் சந்திரிக்கா அரசு உத்தேச அரசியல் சட்டவரைவை முன்வைத்துள்ளது.

★ தீர்வு சம்பந்தமாக இலங்கை மக்கள் எடுக்கும் எத்தகைய நடவடிக்கைக்கும் அமெரிக்கா ஆதரவாகவே இருக்கும்.

★ கொழும்பு போன்ற நகரங்களில் குண்டுத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாலேயே அவர்களை பயங்கரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துக் கொண்டது.

இவ்வாறு பில் றிச்சேர்ட்சன் தெரிவித்தார்.

பில் றிச்சேர்ட்சன் பேசும் போது இடையில் குறுக்கிட்டுப் பேசிய அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான உதவி வெளிநாட்டு அமைச்சர் கார்ள் இன்டர்பேர்த் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி சந்திரிகாவினால் மேற்கொள்ளப்படும் அரசமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகள் அமைதியான தீர்வு ஒன்று ஏற்பட ஏதுவாக அமையும் என்று நாம் நம்புகின்றோம்.

அதேவேளை இலங்கை விவகாரத்தில் அக்கறை காட்டுவதற்கு இந்தியாவுக்கு இருக்கும் கடப்பாடு பற்றிக் கூறும் போது கடந்த காலங்களில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவுகள் சிறப்பாக அமைந்திருந்தன. இது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

குறிப்பாக முன்னாள் பிரதமர் குஜ்ராலின் இலங்கை விவகாரம் தொடர்பான நிலைப்பாடு பாராட்டத் தக்கது.

குஜ்ராலின் அணுகு முறையையே புதிய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும் தொடருவார் என்று நம்புகின்றோம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-ரீ)

## பஞ்சதள ராஜகோபுரம்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்துக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகிறது. 29 ஆம் திகதி அஷ்டலக்ஷ்மிக்கு தீப பூசையும், தான கர்சன மந்திர ஹோமமும், 30 ஆம் திகதி எண்ணெய்க் காப்புச் சாத்துதலும் இடம்பெறும்.

மே முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மூலஸ்தான மற்றும் இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

## விளையாட்டு உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு விரைவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சி. பசுபதி மேற்கொண்டுள்ளார்.

(ஐ-171)

## புனித தோமையர் ஆலயம் புனரமைப்பு

வடமராட்சி, ஏப். 20

புனரமைப்புச் செய்யப்பட்ட பருத்தித்துறை புனித தோமையர் ஆலயம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இதனைத் திறந்து வைத்து முதலாது திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுப்பார்;

நூற்றாண்டுகாலபழைமை வாய்ந்த இந்த ஆலயம் பல இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

(ஐ-173)

## நுணசை வித்தியாலயம் இயங்குகிறது

சண்டிலிப்பாய், ஏப். 20

மாதகல் நுணசை வித்தியாலயம், மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

நுணசை வித்தியாலயம் முன்பு இயங்கிய பகுதியில் மக்கள் மீளக்குடியேறலுக்கு இன்னும் அனுமதிக்கப்படாத இடமாக இருந்து வருகின்றது குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

## வடமராட்சி கிழக்குப் பகுதி வரட்சியால் பாதிப்பு

வடமராட்சிகிழக்குப் பகுதியில் கடும் வரட்சி நிலவுகிறது.

குளங்கள், துரவுகள் என்பன நீர்வற்றி உள்ளமையால் கால் நடைகள் நீருக்காக அலைகின்றன.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பகுதி விவசாயிகள் உரவகைகள் எடுத்துச் செல்வதை படையினர் கட்டுப் படுத்தி உள்ளனர்.

(ஐ-36)

## உடற்பயிற்சியின் போது மரணமடைந்த நபர்

### உள் உறுப்புக்கள் ஆய்வுக்கு

மட்டக்களப்பு, ஏப். 20

மட்டக்களப்பில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தசமயம் மயக்கமடைந்து மரணமான தேசிய துணைப் படை வீரரின் மரணத்தில் சந்தேகம் உள்ளதால் அவரின் உடல் உறுப்புக்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புமாறு பதில் நீதிவான் கே. தங்கவடிவேல் உத்தர விட்டுள்ளார்.

நடராசா தேவதாஸ் (வயது 30) - ராஸீக் அணியைச் சேர்ந்த நபரே உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த சமயம் மரணமானார்.

இவரது பிரேத பரிசோதனை அறிக்கையில்-

இவர் மொட்டையான ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளார் எனவும்-

தொடர்ச்சியான உடற்பயிற்சி காரணமாக ஏற்பட்ட இறுக்கம், விறைப்பு போன்றவற்றால் இழையம் சிதைவடைந்து அதனால் ஏற்பட்ட அதிகக் குருதிப் பெருக்கம் காரணமாக இவரின் மரணம் நேர்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனாலேயே பதில் நீதிவான் இறந்தவரின் குருதி, சிறுநீரகம், இருதயம் ஆகியவற்றை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி அறிக்கை பெறுமாறு உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-21-9)

## காடாப்புலம் பகுதியில் பாரிய மரங்கள் தறிப்பு

சண்டிலிப்பாய், ஏப். 20

முன்னர் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலை இருந்த இடத்திலுள்ள பாரிய மரங்கள் விறகு சேகரிப்பவர்களால் கண்டபடி தறித்து அழிக்கப்பட்டு வருகின்றன.

காடாப்புலம் என்னுமிடத்திலுள்ள இவ் வைத்திய சாலைக் கட்டடம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டு தரை மட்டமான நிலையில் உள்ளது.

வைத்தியசாலை வளவில் நின்ற சுமார் 25, 30 வருட கால பாரிய மரங்கள் யாவும் ஏற்கனவே தறித்துக்கொண்டு போகப்பட்டுள்ளன. ஏனைய சிறிய மரங்களும் தற்போது தறிக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-135)

## யாழ்ப்பாண நூலகத்துக்கு அமெ. அன்பளிப்பு

கொழும்பு, ஏப். 20

யாழ்ப்பாணம் நூலகத்துக்கு அமெரிக்கா 10 ஆயிரம் நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இலங்கை வந்த அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான உதவி வெளிநாட்டு அமைச்சர் கார்ள் இன்ரபேர்க் இந்த நூல்களை வழங்கினார்.

அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்தவை. சிறுவர்களுக்கான நூல்களும் இதில் அடங்கியுள்ளன.

(இ-9)

## தேர்தல் கடமைக்கான கொடுப்பனவு

அச்சுவேலி, ஏப். 20

உள்ளூராட்சி தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றன.

ஜனவரி மாதம் நடைபெற்ற யாழ். மாவட்டம். பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிக்கான உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிகாரிகள் ஊழியர்களின் கொடுப்பனவுகளே வழங்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்களின் கொடுப்பனவுகள் தனித் தனி காசோலை மூலம் அவர்கள் கடமைபுரியும் அலுவலக பொறுப்பதிகாரிகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

(ஐ-11)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 20

பளை அரசர்கேணிபெரிய தம்பிரான் கோயில் அஷ்டோத்தர சத கலச சங்காபிஷேகம் இன்று முற்பகல் 10. 00 மணி முதல் இடம் பெறவுள்ளது.

(ஐ-8-30)

★ ★ ★

நுணாவில் கிழக்குகல்வயல் அருள்மிகு ஐயனார் ஆலய அலங்கார உற்சவம் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

இறுதி நாளான இன்றுபிற்பகல் 2. 00 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும்.

(ஐ-31)

## ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

வரணி, ஏப். 20

வடமராட்சி கிழக்கு கல்விக் கோட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

போதிய ஆங்கில ஆசிரியர் இன்மையால் வடமராட்சி கிழக்கு மாணவர்கள் ஆங்கில கல்வியைக் கற்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

(ஐ-171)

## பிரதேசசபை அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி, ஏப். 20

மீசாலை, புத்தூர் சந்தி கமநல சேவைகள் திணைக்கள கட்டடத்தில் இயங்கி வந்த சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகம் இன்று முதல் கொடிகாமத்தில் உள்ள பிரதேசசபை கச்சாய் உப அலுவலகக் கட்டடத்தில் இயங்குமெனப் பிரதேசசபைத் தலைவர் பொ.அன்ரன் தெரிவித்தார்.

தற்போது தலைமை அலுவலகம் இயங்கும் கட்டடத்தில் சபைக் கூட்டங்கள் நடத்துவதற்கான இடவசதிகள் இல்லாததால் அலுவலகம் கச்சாய் உப அலுவலகத்திற்கு மாற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## தேசியப் பிரச்சினைகளில் கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும்

### பொதுநலவாய செயலாளர் கோரிக்கை

கொழும்பு, ஏப் 20

தேசிய பிரச்சினைக்குதீர்வு காண்பதில் அரசு - எதிர்க் கட்சி என்பன கருத்துமோதல்களை தவிர்த்துஇணைந்து செயல்பட வேண்டும்.

இப்படி இலங்கைக்கு வந்துள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் ஏமேக அன்யோகு கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்னாள் வெளி விவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்தை அவர் சந்தித்தார்.

அப்பொழுதே அவர் மே[illegible] [illegible] கோரிக்கையை விடுத் தார்.

''இரு தரப்புகளும் சிறிய கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு பாதகமானதாகிவிடும்'' என்றும் அவர் கூறினார்,

ஏ. ஸி. எஸ். ஹமீத் இதற்குப்பதில் அளிக்கையில்இனப் பிரச்சினைக்கு முதல் முதலில் அதிகார பரவலாக்கம் (மாகாணசபை) தீர்வை வழன் வைத்தது ஐ. தே. க. தான்.

அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிர்க் கட்சி போதிய ஒத்துழைப்புகளை [illegible]கின்றது. அதனால் தான் தீர்வுயோசனைக்கு மாற்று யோசனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

3-ஆம் மண்டல நாடுகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், ஜன நாயகம் செயல் வடிவம் பெறவும் பொதுநலவாய நாடுகள் தலையிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதே சமயம் நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் செயலாளர் நாயகம் சந்தித்துப்பேசினார்.

இனப்பிரச்சினை விவகாரம் குறித்து இவர்கள் பிரதானமாக உரையாடினார்கள் என தெரியவருகின்றது.

(இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட அயர்லாந்துக்கு ஒரு நீதி இலங்கைக்கு ஒரு நீதியா?

# அறுபதாயிரம் தமிழர்கள் இறந்தும் எவராவது கவலைப்படவில்லை

## தமிழர் பணிக் குழுத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 20

இலங்கையில் நடக்கும் போரினால் 60 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ள போதும், இதுபற்றி எவரும் கவலைப்படவில்லையே. உலகில் முதல்தர சக்திவாய்ந்த நாடாக இருக்கும் அமெரிக்கா இது விடயத்தில் அக்கறை காட்டக் கூடாதா?

இப்படி கேள்வி எழுப்பினார் கொழும்புவாழ் தமிழர் பணிக்குழுத் தலைவர் என். விஜயசிங்கம்.

இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க அதிகாரிகளான பில் றிச்சேர்ட்சன், கார்ள் இண்டர்பேர்க் ஆகியோருடன் நடந்த சந்திப்பின் போதே அவர் இப்படி கேள்வி எழுப்பினார்.

அமெரிக்கத் தூதரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த விருந்தில் கலந்து அவர் தெரிவித்ததாவது:-

வட அயர்லாந்தில் 3 ஆயிரம் பேர் இறந்தனர். காஷ்மீரில் 25 ஆயிரம் பேர் இறந்தனர். ஆனால் இலங்கையில் 60 ஆயிரம் தமிழர் யுத்தத்தால் கொல்லப்பட்டனர். வட அயர்லாந்து, காஷ்மீர் விடயந்தில் உலக நாடுகள் கவலைப்படுகின்றன. ஆனால் இலங்கை விடயத்தில் கவலைப்படவில்லையே.

முக்கிய நாடாக விளங்கும் அமெரிக்கா இதில் கவனம் செலுத்த வேண்டும்.

பயங்கரவாதம்தான் இலங்கையில் நடக்கிறது என்று கூறுகிறார்கள். இந்த பயங்கரவாதத்தைப் படிப்பித்தவர்கள் யார்?

நாம் ஜனநாயக வழியில் சத்தியாக்கிரகம், சாத்வீகப் போராட்டம் நடத்தினோம் அவற்றை தடுத்து நிறுத்தியதால் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு தமிழர் தள்ளப்பட்டனர்.

தமிழ் மக்களை எச். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் ஏமாற்றி வந்துள்ளனர். இன்றும் அதுதான் நடக்கிறது.

ஆகவே பயங்கரவாதப் போராட்டம் என்று கூறுவதை விட்டு 3 ஆம் தரப்பு ஊடாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இதுவே இன்று அவசியம் தேவையானது —

இப்படி அவர் கூறினார்.

## சாவகச்சேரியில் கைதான இளைஞர் விடுவிப்பு

தென்மராட்சி, ஏப். 20

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்,

ஓட்டோ ஒன்றைக் கொள்வனவு செய்து திரும்பிக் கொண்டிருந்த சமயம் இவர்கள் மூவரும் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (இ-ரீ-117)

## மே இறுதி வரை வெப்பம் நீடிக்கும்

கொழும்பு, ஏப். 20

இலங்கையில் தற்பொழுது நிலவி வருகின்ற கடுமையான வெப்பநிலை மே மாத இறுதியில் சீரடைந்துவிடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாத ஆரம்பத்தில் வீசும் பருவக் காற்றுகளாலும், மேற்காவுகை மழையினாலும் நாட்டின் காலநிலை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளி மண்டலத்தில் அதிகளவான நீராவி காணப்படுவதனால் உடலில் இருந்து வெளியேறும் வியர்வை மேல் உறுஞ்சப்படாமல் உள்ளது. இதனாலேயே தற்போது எம்மால் அதிக வெப்பத்தை உணரக் கூடியதாக உள்ளது.

இச் சூழ்நிலைக்கான மற்றைய காரணம் சூரியன் இலங்கைக்கு மேலாகக் காணப்படுவதாகும். ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி இலங்கைக்கு மேலாக உதித்த சூரியன் இன்னும் சில நாள்களில் எமது நாட்டின் எல்லைகளில் இருந்து விலகிச்செல்ல உள்ளது எனவும் வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-9)

### யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

நாட்டுப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு ஏற்பட்டுள்ளது.

ஆனால் கடந்த 15 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் எமது நாட்டு யுத்தத்துக்கு முடிவு காணப்படவில்லை. வடக்கு - கிழக்கில் 60 ஆயிரம் பேரை இழந்து, பாரிய உயிரிழப்பைச் சந்தித்துள்ளதுடன் உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதால் தொழில் எதுவும் செய்ய முடியாத நிலையில் அப்பகுதி மக்கள் உள்ளனர்.

மக்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ள இந்த யுத்தத்தை நிறுத்த ஆக்கபூர்வமான செயலில் ஈடுபட வேண்டிய கடமைப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டு.

போரில்ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளையும் பேச்சுக்களில் பங்குபெறச் செய்ய வேண்டும். அவர்களுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும். அவர்களும் பங்குபெற வேண்டும்.

பிரச்சினைக்கு தீர்வுகாண மூன்றாம் தரப்பு அவசியம் என்பதை சகலரும் ஏற்கின்றார்கள்.

ஆகவே மூன்றாம் தரப்பு ஒன்றின் மூலமாக இரு தரப்புக்கும் இடையில் உள்ள சந்தேகங்களை — நம்பிக்கையீனங்களை — தீர்க்க வேண்டும். அதன் மூலம் ஆக்கபூர்வமான பங்களிப்பை சர்வதேச சமூகம் வழங்கவேண்டும்.

பிரிட்டனில் கொன்சர்வேட்டிவ் கட்சியும், தொழில் கட்சியும் ஒருமித்த கருத்துடன் செயற்பட்டதால்தான் வட - அயர்லாந்துப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டது.

ஆனால் இங்கு ஐ. தே. க. வும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஒத்த கருத்துடன் செயற்படவில்லை. இரு கட்சிகளும் தனிப்பட்ட விடயங்ளில் முரண்பாடாகச் செயற்படுகின்றன.

இரு கட்சிகளுக்கும் இடையில் ஒருமித்த கருத்து ஏற்படாமையும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாமைக்கு காரணமாகும். —

இப்படி அவர் மேலும்தெரிவிததார். (இ-3)

## அனுருத்த திருமலை விஜயம்

திருகோணமலை, ஏப். 20

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இருநாள் விஜயம் மேற்கொண்டு திருகோணமலைக்குச் சென்றார்.

நேற்று முன்தினம் திருகோணமலை வந்த அவர்திருமலை கடற்படைத் தளத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்றை நடத்தினார்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள்பங்குபற்றிய இம்மாநாட்டில் திருமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து ஆராயப்பட்டது.

நேற்றுக்காலை கோணேஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாட்டில் கலந்து கொண்ட அவர் கொழும்பு திரும்பினார் (இ-3)

## இலங்கையருக்கு அதிர்ஷ்டம்

கொழும்பு, ஏப். 20

டுபாய் வர்த்தகப் பெருவிழாவில் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேருக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன.

இரண்டு லட்சத்து 60 ஆயிரம் டொலர் பெறுமதியான ஏழு ஆடம்பரக் கார்களை இவர்கள் வென்றுள்ளார்கள்.

27 டொலர் பெறுமதியான லொத்தர் சீட்டினை வாங்கியே இவர்கள் 12 லட்சத்து 60 ஆயிரம் டொலர் பெறுமதியான கார்களைப் பெற்றுள்ளனர்.

பரிசு பெற்றவர்களில் மூவர் பெண்கள். இவர்கள் கார்களுக்குப் பதிலாகபணத்தைப் பெற்று ஒவ்வொருவரும் 53 ஆயிரம் டொலர் என்ற அடிப்படையில் பகிர்ந்துகொள்ள தீர்மானித்துள்ளனர். (இ-9)

## ஆயுதக் கடத்தல் செய்தி அமைச்சு மறுக்கிறது

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து முஸ்லிம் அமைப்பு ஒன்றுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டன என்ற தலைப்பில் வெளிவந்த செய்திகளை துறைமுகங்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மறுத்துள்ளது.

அமைச்சையும் அமைச்சில் உள்ளவர்களையும் அவமதித்து அபகீர்த்தி உண்டு பண்ணும் நோக்கிலேயே இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து முஸ்லிம்அமைப்புக்கோ அல்லது வேறு எந்த ஓர் அமைப்புக்கோ ஆயுதங்கள் கொண்டு செல்லப் படுவதைத் தடுக்க பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அப்படியான ஒரு சம்பவம் இடம் பெற முடியாது. அப்படி ஒரு சம்பவம் இடம்பெறவும் இல்லை என அமைச்சு அறிவித்துள்ளது. (இ-9)

## மலேரியா மருந்துக்கு வன்னியில் தட்டுப்பாடு — நோயாளர்கள் மன்னாருக்கு

கொழும்பு, ஏப். 20

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவி வருகின்றன. இந்த நோய்களால் பதிக்கப்பட்டவர்கள் மல்லாவி, முழங்காவில், முல்லைத்தீவு ஆகிய வைத்தியசாலைகளுக்கே சிகிச்சைக்குச் செல்கின்றனர்.

ஆனால் மேற்படி வைத்தியசாலைகளில் இத்தகைய நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு தேவையான மருந்துகள் பற்றாக் குறையாக இருப்பதால் அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்கள் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தக்காலாண்டுக்கான மருந்து வகைகள் இதுவரை அனுப்பப்படாமையினாலேயே இவ்வாறான ஓர் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேவையான மருந்துகளை இப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ள போதிலும் சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தாமதிப்பதனாலேயே மருந்துகளை எடுத்துச் செல்ல முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (இ-10-9)

## ஜி. சீ. ஈ. (சாதாரண தர) மாணவருக்கு உடல் நலக்கல்வி ஒரு பாடம்

கொழும்பு, ஏப். 20

அடுத்த ஆண்டு முதல் உடற்பயிற்சி மற்றும் உடல் நலக்கல்வி ஒரு தொழில் நுட்பப்பாடமாக பாடசாலைப் பாடவிதானத்திலும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையிலும் சேர்த்துக் கொள்ளப்படும்.

தற்சமயம் உடற்பயிற்சிக் கல்வியானது நாளாந்தம் 45 நிமிட உடற்பயிற்சி வகுப்பாக மட்டு படுத்தப்பட்டிருக்கின்றது. உத்தேசக்கல்வி சீர்திருத்தங்களுக்கு அமைய உடல் நலக்கல்வி ஒரு தொழில்நுட்பப் பாடமாக்கப்படும்.

அடுத்த நூற்றாண்டில் இருந்து இது ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்குரிய பாடமாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-9)

## இந்திய நிதி அமைச்சருடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு

நீதி அரசமைப்பு அலுவல்கள் அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் வாஷிங்டனில் இந்திய நிதி அமைச்சர் ஜஸ்வன்சிங்குடன் இரு தரப்பு விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டங்களில் பங்கு பற்றுவதற்காக வாஷிங்டன் சென்றுள்ள பீரிஸ் இந்தப் பேச்சுக்களை நடத்தினார் (இ-9)

### சிறிமாவோ..,

(முதலாம் பக்கத் தொடர்)

பிரதமர் பதவியை பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு வழங்கவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விருப்பமாக இருப்பதாகவும்—

அநுருத்த ரத்வத்தவுக்கு பிரதமர் பதவி போவதை சிறிமாவோ கடுமையாக எதிர்ப்பதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-10)

### இருவர்,...

(முதலாம் பக்கத் தொடர்)

ஸ்ரீதரன் — மட்டக்களப்பு) என்பவரும் —

ஒலுமடுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் குழந்தை (பசுபதி நிமலசேகரம் — யாழ்ப்பாணம்) என்பவரும் — களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (இ-3)

### திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும்—

திரியாய்க்கு அப்பால் உள்ள கடலில் விடுதலைப் புலிகளின் படகுகள் சென்று கொண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்ததையடுத்தே கடற்படைப்பீரங்கிப் படகுகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சண்டையின்போது [illegible] மையாகக் கிடைக்கவில்லை.

(தி16-4.953

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இது குறித்து மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அவர் புலிகளின் அந்த ஒளிபரப்பில் குறிக்கீடு செய்யுமாறும் —

அது ஒளிபரப்பப்படும் இடத்தைக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் — உத்தரவிட்டார்.

இப்படி இராணுவ தலைமை வட்டாரங்களை ஆதாரம் காட்டி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 20-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org